# போஸ்டர் ஒட்டினால் ரூ.1,000 அபராதம்

## மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை

**சென்னை, செப். 4–**

'சென்னையில், மெட்ரோ ரயில் திட்ட வளாகங்கள், கட்டுமானங்களில், அனுமதியின்றி போஸ்டர்கள், துண்டு பிரசுரங்கள் ஒட்டினால், ஆறு மாதம் சிறை தண்டணை அல்லது 1,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்' என, மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

சென்னையில், இரண்டு வழித்தடங்களில், 42 கி.மீ., தொலைவுக்கு, மெட்ரோ ரயில் சேவை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம், 32 ரயில் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

இதில், ரயில் நிலையங்கள், ரயில் பாதைக்கான மேம்பாலங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு பொறுப்பு, மெட்ரோ ரயில் நிறுவன கட்டுப்பாட்டில் உள்ளது. இதில், பல்வேறு அரசியல் கட்சிகள், தனியார் அமைப்புகள் சார்பில், விளம்பர போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன.

அனுமதியின்றி ஒட்டப்படும் இத்தகைய போஸ்டர்களால், மெட்ரோ ரயில் வளாகங்களின் பொலிவு பாதிக்கப்படுகிறது. இதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை, மெட்ரோ ரயில் நிறுவனம் எடுத்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பு:

மெட்ரோ ரயில் திட்ட மேம்பால தூண்கள், தடுப்புகள், இதர கட்டுமானங்களில், அனுமதியின்றி போஸ்டர்கள், துண்டு பிரசுரங்கள் ஒட்டுவது, விளம்பர வாசகங்கள் எழுதுவது, வரைவது, சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதை மீறி, போஸ்டர், துண்டு பிரசுரங்கள் ஒட்டுபவர்களுக்கு, ஆறு மாதம் சிறை தண்டனை, 1,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். மெட்ரோ ரயில் வளாகங்களை, துாய்மையாக பராமரிக்க, பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.